இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 182 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 29 – வியாழக்கிழமை 12 பிப்ரவரி 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 182 : Thiruvalluvar Year - 2057 - Thai 29 - Thursday 12 February 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## ‘புதுமைப்பெண்’ போன்ற புதுமைத் திட்டங்களால்

# ‘திராவிட மாடல்’ அரசு பெண்களின் தலையெழுத்தையே மாற்றியுள்ளது!

### சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, பிப். 12 -

**சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “புதுமைப் பெண் போன்ற புதுமைத் திட்டங்களால் ‘திராவிட மாடல்’ அரசு பெண்களின் தலையெழுத்தையே மாற்றியுள்ளது” என்று கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.2.2026) சென்னை, மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்தவ உயர்கல்வி சங்கம் (All India Association for Christian Higher Education) மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி (Women's Christian College) இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு :-

அகில இந்திய கிறிஸ்தவ உயர்கல்வி சங்கம் சார்பில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

முதலில் எனக்கு ஒரு சந்தேகம். இன்னும் தேர்தல் Notification அறிவிக்கவில்லை. தேர்தல் Notification அறிவிப்பதற்கு முன்பாக, எல்லோரும் இங்கே தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டார்கள். எனக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. ஆனால், தேர்தல் பிரசாரத்தை நடத்தியிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

All India Association For Christian Higher Education அமைப்பும், நூற்றாண்டு கடந்த W.C.C அமைப்பும் இணைந்து நடத்துகின்ற இந்த நன்றி அறிவிப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இன்னும் கூட சொல்லவேண்டும் என்றால், ஒரு உணர்ச்சியோடும், நெகிழ்ச்சியோடும் நான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன். நானும், MCC பள்ளிக்கூடத்தின் பழைய மாணவன் தான். அந்த பழைய மாணவன் தான் இன்றைக்கு W.C.Cக்கு வந்திருக்கிறேன். MCCயிலிருந்து WCCக்கு வந்திருக்கிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.2.2026) சென்னை, மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்துவ உயர்கல்வி சங்கம் (All India Association for Christian Higher Education) மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி (Women's Christian College) இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில் உரையாற்றினார். இவ்விழாவில், தயாநிதிமாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், இனிகோ இருதயராஜ், இ.பரந்தாமன் மற்றும் நே.சிற்றரசு, கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகள், பேராசிரியர் பெருமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வரவேற்புரை ஆற்றிய WCCயின் கல்லூரியின் முதல்வர் சொன்னார்; இங்கே படித்து வெற்றி பெற்ற பெண்களின் பெயர்கள், அடுத்து அந்த லிஸ்ட்டில் வரப்போகின்ற பெண்களான உங்களுடைய பெயர்கள் வரும் என்ற நம்பிக்கையோடு உங்களுடன் கலந்து கொள்வதில் இன்னும் உற்சாக உணர்வை எனக்கு ஊட்டுகிறது.

**கூடுதல் பொறுப்புணர்வை உருவாக்கி இருக்கிறது!**

இங்கே பேசிய பலர் நன்றி சொல்லி பேசினார்கள். நமக்குள் நன்றி சொல்லிக்கொள்ள தேவையில்லை. இதை என் மீது நீங்கள் வைத்திருக்கக்கூடிய அன்பின் வெளிப்பாடாக நான் எடுத்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்னும் இன்னும் உங்களுக்கு தேவையானதை செய்து கொடுக்க வேண்டும் என்று கூடுதல் பொறுப்புணர்வை இந்த நிகழ்ச்சி எனக்கு உருவாகியிருக்கிறது. அதுதான் உண்மை.

சகோதரர் இனிகோ இருதயராஜ் இங்கு இருக்கிறார். ஒவ்வொரு முறையும் என்னைப் பார்க்க வரும்போது, இங்கே இருக்கக்கூடிய பலருடன் சேர்ந்து வருவார். வரும்போது, நிறைய கோரிக்கைகளுடன் வருவார். அதில் பல கோரிக்கைகள் எளிதில் தீர்த்து வைக்க கூடியதாக இருக்காது. கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். அதில், சில சட்ட சிக்கல்கள் இருக்கும். பழைய விதிகளை எல்லாம் திருத்த வேண்டியதிருக்கும். புதிதாக G.O. போட வேண்டியிருக்கும். கூடுதலாக பல கோடி நிதியும் தேவைப்படும். இருந்தாலும், எல்லாவற்றையும் முழு முயற்சி எடுத்து அதை நாங்கள் செய்து கொடுப்பதுதான் எங்களுடைய கடமையாக கருதி, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்! ஏனென்றால், இனிகோ கேட்டால், இல்லை என்று சொல்லவே முடியாது.

இங்கே சொன்னதுபோல, சமீபத்தில், நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் கூட பல அறிவிப்புகளை எல்லாம் நான் நெல்லையில் வெளியிட்டேன். இப்போதும் இந்த அமைப்பின் சார்பில் இன்னும் சில கோரிக்கைகள் இருக்கின்றன. அடுத்தும் நாம்தான் வருவோம்! இங்கே பேசிய பேச்சுக்களை எல்லாம் பார்த்தால், எந்த சந்தேகமும் எனக்கு வரவில்லை! அதனால், கண்டிப்பாக உங்கள் மீதுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றி தருவோம்.

**கிராமப்புற மாணவிகளுக்கு அதிகப் பயன்கள்!**

இங்கு இத்தனை மாணவிகளை ஒரே இடத்தில் பார்க்கும்போது, உங்களுக்காக செயல்படுத்தி வரும் திட்டங்களின் பலன்களை எல்லாம் நினைத்துப் பார்க்கிறேன். இங்கே காணொலி காட்சியின் மூலமாக சிலர் பேசினார்கள். திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்ததும் பெண்களின் கல்விக்காக நாம் கொண்டு வந்திருக்கக் கூடிய முதல் பெரிய திட்டம் என்றால், அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்தான்! இந்தத் திட்டம் எந்த அளவிற்கு தாக்கம் செலுத்தி இருக்கிறது என்று தெரிந்துகொள்ள, அதை நாங்கள் புரிந்து கொள்ள, ஒரு ஆய்வு செய்யுங்கள் என்று மாநில திட்டக்குழுவிடம் சொல்லியிருந்தேன்.

சட்டமன்ற உறுப்பினர் எழிலன் அவர்கள் அந்தத் திட்டக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார். ஜெயரஞ்சன் தலைமையில் அந்த குழு இருக்கிறது. அவர்கள் கொடுத்த முடிவுகளைப் பார்த்து, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

நம்பிக்கையில்லாத் தீர்மானம்:

## மக்களவை வருகையைத் தவிர்த்த சபாநாயகர் ஓம் பிர்லா!



புதுடெல்லி, பிப். 12 -

மக்களவையில் எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு அனுமதி மறுக்கும் சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக பதவிநீக்க தீர்மானம் கொண்டுவருவது தொடர்பாக, நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தின. இந்நிலையில் சபாநாயகர் ஓம் பிர்லா நேற்று முன்தினம் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் தவிர்த்துள்ளார்.

---

தமிழ்நாட்டில்

## எஸ்.ஐ.ஆர். பணி நிறைவு!

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.17இல் வெளியீடு!



சென்னை, பிப். 12 -

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க நீட்டிக்கப்பட்ட கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17ம் தேதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலையொட்டி முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் குழு அடுத்த வாரம் இறுதியில் தமிழ்நாடு வருகிறது. தேர்தலுக்கான முன்னேற்பாடு, பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட் நாயக், பொறுப்பு டிஜிபி வெங்கட்ராமன் ஆகியோருடன் இக்குழு ஆலோசனை நடத்துகிறது.

தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தேர்தல் குறித்து இக்குழு ஆலோசனை நடத்துகிறது. இதேபோல் புதுவை, கேரளா மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்ய தலைமை தேர்தல் ஆணையர் குழு திட்டமிட்டுள்ளது.

---

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து –

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது!

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் - நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து - தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத்திலும் மற்றும் கழக ஒன்றியம், நகரம், பேரூர் அளவிலும் 12.02.2026 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தொழிலாளர் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள தொழிலாளர் விரோத 4 தொகுப்பு சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து 12.2.2026 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தம் மற்றும் மறியல் நடத்துவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து,

**இன்று (12.2.2026 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.**

**தமிழ்நாடு போராடும்!**
**தமிழ்நாடு வெல்லும்!**

**- மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள்**

---

மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை!

# அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தல்!

### மக்களவை அடுத்தடுத்து ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 12-

மக்களவை நேற்று முன்தினம் கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கு அவைத் தலைவர் மறுத்ததால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதனால் மக்களவையை அடுத்தடுத்து அவைத் தலைவர் ஒத்தி வைத்தார்.

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் சீனா எல்லை விவகாரம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர். ராகுல்காந்தியை பேச அனுமதிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இதன் காரணமாக, கடந்த வாரம் முழுவதும் மக்களவை நடவடிக்கைகள் முடங்கின. இந்த நிலையில், 8.2.2026 அன்று முதல் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் தொடங்க இருந்தது. இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதனை சபாநாயகர் ஏற்க மறுத்ததால், நாள் முழுவதும் அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டன. இந்த விவகாரம் நேற்று முன்தினமும் எதிரொலித்தது.. அமெரிக்க ஒப்பந்தம் குறித்து விவாதம் நடத்த அனுமதிக்க முடியாது என அவைத் தலைவர் பிடிவாதமாக தெரிவித்ததால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இதனால், மக்களவை முதலில் நண்பகல் 12 மணி வரையும், பின்னர் பிற்பகல் 2 மணி வரையும் ஒத்தி வைக்கப்பட்டது.